CIVILNEST IAS ACADEMY

(The Institute for Civil Services)

1513 E, 2nd Floor, LEO Campus, East Main Road,
Anna Nagar West Extension, Chennai - 600101
8939270339 / 8939290339
www.civilnestiasacademy.com

UPSC CIVIL SERVICES MAINS EXAMINATION

TAMIL LITERATURE OPTIONAL

STUDY MATERIALS & BOOK ORDERING INFORMATION

A Comprehensive Learning Resource for UPSC Mains Aspirants

CIVILNEST IAS ACADEMY is pleased to provide comprehensive study materials and recommended textbooks for candidates preparing for the UPSC Civil Services Main Examination – **Tamil Literature Optional.**

To facilitate students' preparation, the Academy offers both its own specially prepared study materials and recommended textbooks required for Paper I and Paper II.

Students can purchase the ***materials individually or opt for a complete package*** covering both papers.

1. PAPER I – CIVILNEST IAS ACADEMY STUDY MATERIALS

The Academy provides its specially prepared study materials for Tamil Literature Optional – Paper I.

These materials are developed by CIVILNEST IAS ACADEMY to support students in their systematic preparation for the UPSC Mains examination.

Students can purchase the Paper I study materials separately.

2. PAPER II – RECOMMENDED TEXTBOOKS

For Paper II, the Academy facilitates the procurement and delivery of prescribed and recommended Tamil literary textbooks required for preparation.

These books are sourced from external publishers and book suppliers and arranged for students through the Academy.

Students can order the Paper II textbooks separately.

3. COMPLETE PACKAGE – PAPER I + PAPER II

Students who wish to obtain resources for both papers can opt for the Complete Package, which includes:

- Paper I – CIVILNEST IAS ACADEMY Study Materials.
- Paper II – Recommended Tamil Literature Textbooks.

Students may choose either individual purchases or the complete package according to their requirements.

4. BOOK ORDERING & DELIVERY PROCESS

Students ordering books through CIVILNEST IAS ACADEMY can avail themselves of the following facilities:

Order Confirmation
- Orders will be processed after confirmation of payment and order details.
- Students will be informed about the applicable charges before completing their orders.

Delivery Timeline
- Books are expected to reach students within 7–10 working days from order confirmation.
- Delivery timelines may vary depending on the student's location, book availability and courier service.

Order Tracking Facility
- Once the books are dispatched, students will receive the relevant courier tracking ID or tracking link.
- Students can use the tracking facility to monitor the shipment status and estimated delivery progress.

Doorstep Delivery
- Books will be shipped to the delivery address provided by the student.
- Students are requested to provide accurate and complete delivery details while placing their orders.

5. IMPORTANT INSTRUCTIONS FOR STUDENTS

1. Students should carefully select their preferred option: Paper I, Paper II or Complete Package.
2. Ensure that the delivery address and contact number are accurate.
3. Confirm the availability of the required textbooks before placing an order.
4. Applicable material costs and delivery charges will be communicated before payment.
5. Delivery timelines are indicative and may be affected by courier or logistical delays.

OUR COMMITMENT

At CIVILNEST IAS ACADEMY, we aim to make quality learning resources accessible to

every serious aspirant of the UPSC Civil Services Examination.

Our objective is to simplify the preparation process by providing relevant study materials and facilitating access to essential textbooks through a convenient ordering and delivery system.

Choose Your Resources. Place Your Order. Prepare with Confidence.

CIVILNEST IAS ACADEMY

INSPIRE • LEAD • SERVE

Website: www.civilnestiasacademy.com

CIVILNEST IAS

இந்திய குடிமைப்பணி முதன்மை தேர்வு

தமிழ் இலக்கிய விருப்பப் பாடம்

முதல் தாள் பாடக் குறிப்புகள்

தொகுதி - 1



ஆக்கம் மற்றும் தொகுப்பு

த. வைத்தியநாதன்

பயிற்றுநர் & நிறுவனர்

CIVILNEST IAS ACADEMY

1513 E, 2nd Floor, East Main Road, LEO Campus,

Anna Nagar West Extension,Chennai-600101

8939270339 / 8939290339

www.civilnestias.com

CIVILNEST IAS ACADEMY

முதல் தாள் பாடத்திட்டம்

பிரிவு-அ	பக்க எண்
பகுதி1-தமிழ் மொழி வரலாறு	
1. முதன்மையான இந்தியமொழிக் குடும்பங்கள்	
1.1 மொழி வகைப்பாடு	**01**
1.2 இந்திய மொழிக்குடும்பங்கள்	**11**
1.3 இந்திய மொழிகள்	**17**
1.4 திராவிட மொழிகளின் பழைமை	**33**
1.5 தமிழ்மொழியின் தொன்மை	**47**
2. இந்திய மொழிகளுக்கிடைய பொது நிலையிலும், சிறப்பாக திராவிட மொழிகளிடையிலும் தமிழ் மொழி பெறும் இடம்	
2.1 தமிழின் சிறப்புகள்	**52**
2.2 திராவிட மொழிகள்	**76**
2.3 தமிழும் திராவிடமும்	**79**
3. திராவிட மொழிகளின் வகைப்பாடும் அவை பரவியுள்ள தன்மையும்	
3.1 திராவிட மொழிகள் கட்டுரை	**94**
4. சங்ககாலத்தமிழ் - இடைக்காலத்தமிழ்: பல்லவர் காலத் தமிழ் மொழி அமைப்பு மட்டும்	
4.1 மொழி அமைப்பு	**100**
4.2 பல்லவர் காலத்துத் தமிழ்	**110**
5. தமிழில் பெயர், வினை, பெயரடை, வினையடை, கால இடைநிலைகள், வேற்றுமை உருபுகள் ஆகியவற்றின் போக்கு பற்றிய வரலாற்று நோக்கில் ஆய்வு	
5.1 பெயரடைகள், வினையடைகள்	**121**
5.2 பெயரடையின் வளர்ச்சி வரலாறு	**126**
5.3 வினையடையின் வளர்ச்சி வரலாறு	**130**
5.4 கால இடைநிலைகள்	**135**
5.5 வேற்றுமைகள்	**142**
5.6 வேற்றுமை கட்டுரை	**146**
5.7 பெயரெச்சம்	**162**
5.8 வினையெச்சம்	**164**

	5.9 பெயரடை, வினையடை கால உருபுகள், இடைநிலைகள்	166
6	**பிற மொழிகளிலிருந்து தமிழில் கடன்பட்ட சொற்கள்**	
	6.1 தமிழில் பிற மொழிச் சொற்கள்	170
	6.2 பிற மொழிகளில் தமிழ்	182
	6.3 தமிழில் வழங்கி வரும் பிறமொழி சொற்கள்	186
7.	**தமிழ் வழங்கும் சமூக மற்றும் வட்டாரக் கிளை மொழிகள்**	
	7.1 வட்டார வழக்குச் சொற்கள்	188
	7.2 கிளை மொழி வட்டார வழக்குச் சொற்கள்	191
8.	**பேச்சுத் தமிழுக்கும் இலக்கிய தமிழுக்குமான வேறுபாடு**	
	8.1 பேச்சுத் தமிழுக்கும் இலக்கியத்துக்கும் வேறுபாடு	204
	8.2 பேச்சு மொழி எழுத்து மொழி வேறுபாடு	207
	8.3 தமிழ் பேச்சுமொழி வட்டார மொழி வழக்குகள்	209
	பகுதி-2 தமிழ் இலக்கிய வரலாறு	
9.	**தொல்காப்பியம் அகம், புறம் எனும் பாகுபாடு**	
	9.1 தொல்காப்பியம்	211
	9.2 தொல்காப்பிய கட்டமைப்பு	215
	9.3 தொல்காப்பியச் சிறப்பியல்புகள்	224
	9.4 தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள்	229
	9.5 திணை:அகம்,புறம்	236
	9.6 அகம், புறம் குறித்த மாறுபட்ட கருத்துக்கள்	253
	9.7 திணை - தொல்காப்பியரின் விளக்கம்	260
10.	**சங்க இலக்கியம்**	
	10.1 உலகச் செம்மொழி இலக்கியப் பாடுபொருள் விழுமியங்கள்	267
11.	**சங்க இலக்கியத்தின் சமயப் பொதுமைப்போக்கு**	
	11.1 சங்க இலக்கியத்தின் அமைதிக் குரல்	280
	11.2 சங்க இலக்கியத்தின் சமய பொதுமை போக்கு	287
12.	**அறஇலக்கியங்கள் வளர்ச்சி**	
	12.1 தமிழில் அற இலக்கியங்கள்	290
	12.2 தமிழில் அற நூல்கள்	304
13.	**சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை**	
	13.1 சிலப்பதிகாரம்	313
	13.2 சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை	318

பகுதி-3 பக்தி இலக்கியம்	
14. ஆழ்வார்களும் நாயன்மார்களும்	
14.1 ஆழ்வார்களும் நாயன்மார்களும்: பக்தி இயக்கத்தின் இருபெரும் தூண்கள்	**324**
14.2 பக்தி இயக்கத்தின் தத்துவ மற்றும் ஆன்மீகப் பங்களிப்புகள்	**331**
15. ஆழ்வார் பாடல்களில் நாயகன் நாயகி பாவம்	
15.1 ஆழ்வார்கள்-நாயக - நாயகி பாவம்	**333**
15.2 பக்தி இலக்கியத்தில் 'நாயக-நாயகி' வெளிப்பாட்டு உத்திகள்	**340**
15.3 நாச்சியார் காதல்	**345**
16. சிற்றிலக்கிய வடிவங்கள் தூது, உலா, பரணி, குறவஞ்சி	
16.1 சிற்றிலக்கியம்	**348**
16.2 தூது	**354**
16.3 குறவஞ்சி இலக்கியம்	**366**
16.4 உலா	**373**
16.5 பரணி	**377**
17. இக்காலத்தமிழ் இலக்கியங்களின் வளர்ச்சிக்கான சமூகக்காரணிகள்	
17.1 சமூக காரணிகள் கட்டுரை	**390**
18. நாவல், சிறுகதை, புதுகவிதை, புதுமைப்படைப்புகள்	
18.1 சிறுகதை கால வரையறை	**396**
18.2 சிறுகதை உத்திகள்	**405**
18.3 சிறுகதையின் தோற்றம்	**410**
18.4 தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் பெண் எழுத்தாளர்களின் பங்கு	**416**
18.5 தமிழ் நாவல்களில் பெண்ணியம்	**423**
18.6 நாவல்கள்	**459**
18.7 தமிழில் பின்நவீனத்துவ நாவல்கள்	**442**
18.8 புதுக்கவிதை	**444**
18.9 புதுக்கவிதை தோற்றமும் வளர்ச்சியும்	**447**
18.10 புதுமையான கவிதைகள்	**451**
18.11 கவிதையின் வடிவங்கள் - ஒரு பார்வை	**466**
18.12 தமிழும் தமிழ்மொழிச் சிந்தனையும்	**483**
19. ஆக்கத்தில் வேறுபட்ட அரசியல் கருத்தாக்கங்களின் தாக்கம்	
19.1 அரசியல் கருத்தாக்கங்களின் தாக்கம் கட்டுரை	**485**
19.2 தமிழ் இலக்கியத்தில் பெண்ணியம்	**491**

பிரிவு ஆ	
பகுதி 1-தமிழியலின் அண்மைக்காலப் போக்குகள்	
20. திறனாய்வு அணுகுமுறைகள்: சமூகவியல், உளவியல், வரலாற்றியல்,மற்றும் அறவியல்	
20.1 திறனாய்வு அணுகுமுறைகள்	**494**
20.2 இலக்கிய திறனாய்வு	**509**
20.3 ஒப்பீட்டுத் திறனாய்வு	**514**
20.4 தமிழில் திறனாய்வு : ஒரு வரலாறு	**517**
21. திறனாய்வின் பயன்பாடு	
21.1 இலக்கியத் திறனாய்வின் பயன்கள்	**527**
22. பலவகை இலக்கிய உத்திகள்:உள்ளுறை, இறைச்சி, தொன்மம், ஒட்டுருவகம், அங்கதம், மெய்ப்பாடு,படிமம், குறியீடு, இருண்மை	
22.1 புதுக்கவிதை உத்திகள்	**532**
23. ஒப்பிலக்கியக் கருத்தாக்கம்	
23.1 ஒப்பிலக்கியம்	**553**
24. ஒப்பிலக்கியக் கொள்கை	
24.1 ஒப்பியலின் தத்துவங்கள்	**556**
பகுதி 2 -தமிழில் நாட்டுப்புற இலக்கியங்கள்	
25. கதைப்பாடல்கள்	
25.1 நாட்டுப்புற இலக்கியம்	**582**
26. பழமொழிகள்	
26.1 பழமொழிகள்	**591**
27. விடுகதைகள்	
27.1 விடுகதைகள்	**602**
28. சமூகவியல் பார்வையில் நாட்டார் வழக்காற்றில் மொழிபெயர்ப்பின் பயன்கள்	
28.1 மொழிபெயர்ப்பு	**608**
28.2 மொழிபெயர்ப்பின் பயன்கள்	**620**
29. மொழிபெயர்க்கப்பட்டுள்ள தமிழ் இலக்கியங்கள்	
29.1 மொழிபெயர்ப்புகளும் தழுவல்களும்	**622**
30. தமிழில் இதழியல் வளர்ச்சி	
30.1 இதழியல்	**635**
30.2 இதழ்கள்	**647**

30.3 தமிழ் வளர்ச்சியில் வலைப்பூக்கள்	**667**
30.4 ஊடகத் தமிழ்	**672**
பகுதி3-தமிழர்களின் பண்பாட்டு வரலாறு	
31. காதல்,போர் பற்றிய கருத்தாக்கம்	
31.1 காதல் போர் பற்றிய கருத்தாக்கம், கோட்பாடுகள்	**676**
32. அறக்கோட்பாடுகள்	
32.1 அகப்பொருள் - காதல் பற்றிய அறக்கோட்பாடுகள்	**679**
33. தொல் தமிழர் போரியல் அறநெறிமுறைகள்	
33.1 தமிழர் போர் நெறி முறைகள்	**687**
34. பழக்க வழக்கங்கள் நம்பிக்கைகள்- சடங்குகள்	
34.1 தமிழரின் நம்பிக்கைகள்	**698**
35. ஐந்திணைகள் காட்டும் வழிபாட்டு முறைகள்	
35.1 கட்டுரை	**716**
36. சங்கம் மருவிய கால இலக்கியங்களில் புலப்படும் பண்பாட்டு மாற்றங்கள்	
36.1 கட்டுரை	**718**
36.2 சங்கம் மருவிய காலத்தில் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றங்கள்	**722**
37. இடைக்காலத்தில் ஏற்பட்ட பண்பாட்டு கலப்புகள் (சமணம் மற்றும் பௌத்தம்)	
37.1 சமண, புத்த சமயங்கள்	**726**
37.2 சமணமும், தமிழ்நாடும்	**732**
37.3 பௌத்த சமயமும் தமிழ்நாடும்	**740**
38. கலை மற்றும் கட்டிடங்கள் ஏற்பட்ட வளர்ச்சி (பல்லவர், பிற்காலச் சோழர்கள்,நாயக்கர் காலம்)	
38.1 பல்லவரது சிற்பக் கலை	**744**
38.2 சோழர் கோயிற் பணிகள்	**751**
39. பல்வேறு அரசியல், சமூக சமயப் பண்பாட்டு இயக்கங்கள் தமிழ் சமூகத்தின் மீது ஏற்படுத்திய தாக்கங்கள்	
39.1 பல்வேறு அரசியல், சமூக சமயப் பண்பாட்டு இயக்கங்கள்	**764**
39.2 தமிழ்நாட்டில் சமூக சீர்திருத்த இயக்கங்கள்	**778**
39.3 சங்க கால முதல் தற்காலம் வரை தமிழ்நாட்டில் சமூக சீர்திருத்த இயக்கங்கள்	**781**
40. இக்கால தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு மாற்றத்தில் வெகுசன ஊடகங்கள் பெறும் பங்கு	
40.1 கட்டுரை	**785**

அதிகமான திராவிட மொழிச் சொற்கள் சமஸ்கிருத மொழியில் கலந்துள்ளன என்று கூறுவதும் அவற்றைத் தன்னுடைய கன்னட-ஆங்கில அகராதியில் தருவதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

கிட்டலையடுத்து இதுபற்றி விரிவாக எழுதியவர் ஸ்டன்கெனொவ் என்பவராவர். சமஸ்கிருதத்திலும் இந்தோஆரிய மொழிகளிலும் ஏராளமான வேற்றுச் சொற்கள் காணப் படுகின்றன என்றும் அவற்றுள் பல திராவிட மொழிச் சொற்கள் என்றும் கூறுவர். 'சிவா' என்ற சொல் வேதத்தில் இருப்பினும் இது திராவிடச் சொல் என்பது இவர் எண்ணம். இத்தகைய சொற்கள் வேதத்தில் காணப்படுவதிலிருந்து திராவிட மொழிகளும் திராவிட மக்களின் கொள்கைகளும் ஆரிய மொழியிலும் அவர் தம் கொள்கைகளிலும் தம் செல்வாக்கினைச் செலுத்தியுள்ளன என்று கூறுவார் இவர்." சொற்கள் மட்டுமல்லாமல் ஆரிய மொழிகளின் அமைப் பிலேயே (structure) பல மாற்றங்களைத் தந்தன திராவிட மொழிகள் என்றும் முதன் முதலாக விரிவாக எழுதினார். சமஸ்கிருத மொழியிலும் பிற ஆரிய மொழிகளிலும் காணப்படும் நாமடி ஒலிகள் (retroflex) திராவிட மொழிகளிலிருந்து வந்தவை என்பது இவர் கருத்து. நேரடியாக இவ்வொலிகளைத் திராவிட மொழிகளிலிருந்து கடனாகப் பெற்றிருக்காவிடினும் இவ்வொலி களின் தோற்றத்திற்கு இம்மொழிகளே அடிகோலியிருக்கும் என்பார் இவர். இத்தகைய ஒலி மாற்றங்கள் பலவற்றை ஆரிய மொழிகளில் காணலாம் என்றும் அவை இன்னின்ன என்றும் பலவாறாகக் காட்டித் திராவிட மொழிகளின் செல்வாக்கைக் குறிப்பிடுவார் இவர்.

சொல்லியலிலும் திராவிட மொழிகளின் செல்வாக்கைக் காணலாம். திராவிட்ட மொழிகளில் உள்ள வினைச் சொற்களையும் ஆரிய மொழிகளில் காணப்படும் வினைச் சொற்களையும் ஒப்பிட்டு அவற்றுடன் இந்தோ-ஐரோப்பிய மொழிகளது வினைச் சொற்களையும் வைத்துப் பார்க்கின் இவ் வுண்மை நன்கு தெரியவரும். திராவிட மொழிகளிலுள்ள பின்னு ருபுகள் (postposition) போன்றவை மராத்தி, பீஹாரி போன்ற மொழிகளில் ஏராளமாக இடம் பெற்றிருக்கக் காணலாம். வேத மொழியில் காலம் காட்டுகின்ற தன்மை ஒரு வகையில் இருக்க, பிற்கால ஆரிய மொழிகளில் மாறுபட்டுக் காணப்படுவதும் பகவத் கீதை, நளா போன்ற இலக்கியங்களில் காணப்படும் மொழி நிலையும் வேதகால மொழிநிலையும் தம்முள் பல வேற்றுமைகளைக் கொண்டுள்ளன. என்று கூறுவார். காலம் காட்டும் தன்மையும் வேத கால நிலையிலிருந்த பலவகை காலங்களில் பத்தில் ஒரு பகுதிகூட பிற்கால இலக்கியங்களில் இல்லை என்பார் இவர். இதுபோன்றே இலக்கிய காலத்தில் (Classical literature) இன்னும் மாறிவிட்ட தன்மையைக் காணு கிறோம். இவற்றை யெல்லாம் பற்றி மிக விளக்கமாக எழுதி இவை யனைத்திற்கும் காரணம் திராவிட மொழிகளின் செல்வாக்கே என்று குறிப்பிடுவார்.

தொடரியலிலும் இதே நிலையைக் காணலாம். சாட்டர்ஜி, எமினோ போன்றவர்கள் இது பற்றி நன்கு ஆராய்ந்து எழுதி யுள்ளனர். வினையெச்சங்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை இணைத்தல், வினையாலணையும் பெயர்களைப் பயன் படுத்துதல், வாக்கியங்களில் சொற்களின் வரிசைமுறை போன்ற பல நிலைகளில் திராவிட மொழிகளின் செல்வாக்கைக் காணமுடியும்.' இது பற்றிக் குறிப்பிடுகையில் திராவிட மொழி களில் உள்ள ஒரு வாக்கியத்தை எடுத்து அதன்கண் உள்ள சொற் களுக்குப் பதில் ஆங்காங்கே இந்தி அல்லது வங்காளிச் சொற்களை இடும்போது, அவை இலக்கண வரம்புள்ள வாக்கியங் களாகவே இருக்கின்றன என்றும் இந்நிலையை இந்தோ-ஆரிய மொழிகளுக்கும் ஆங்கிலம் அல்லது பெர்சியன் மொழிகளுக்கு மிடையே காணமுடியாது என்றும் கூறுவார் சாட்டர்ஜி.

ஜூல்ஸ் பிளாக் (Jules Bloch) என்பாரும் இதுபற்றிக் குறிப் பிட்டுள்ளார். சமஸ்கிருத மொழியில் ஏற்பட்டுள்ள நாமடி ஒலிகள் (retroflex) பற்றியும் வினைச் சொற்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றியும் வினையெச்சங்கள் பற்றியும் இவர் பேசுவது காணலாம். முண்டா மொழிகளும்

உள்ளன. இவ்வளவு மிகுதி எழுத்துகள் ஏன் என்று எண்ணுபவர் உண்டு. எழுத்துகளைச் சுருக்கும் வகையில் 'எழுத்துச் சீர்திருத்தம்' செய்யப்படுகிறது. 'ஐ' என்ற எழுத்து 'அய்' என்றே வழங்குகிறது. 'ஔ' என்ற எழுத்து 'ஔவையார்' என்ற சொல்லை வைத்துத்தான் இன்னும் உயிரோடு இருக்கிறது. 'அவ்' என்றும் குறிப்பிடலாம் என்று கூறுவர். இவற்றில் சில எழுத்துகள் சொல்லின் தொடக்கத்தில் வரும், சில எழுத்துகள் சொல்லின் முடிவில் வரும், சில எழுத்துகள் இடையிலும் வரும். அதுபற்றி,

மொழிமுதலில் வரும் எழுத்துகள் .

மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள்

மொழிக்கு இடையில் வரும் எழுத்துகள்

என்றும் வகைப்படுத்தலாம். புள்ளி வைத்த எழுத்துகள் சொல்லின் தொடக்கத்தில் வருவதில்லை. அதாவது, மெய் எழுத்துகள் முதலாக வரச் சொற்கள் அமையா என்ற ஒழுங்கு முறை தமிழுக்கு உண்டு.

தமிழ் எழுத்து வகைப்பாடு

தமிழ் எழுத்துகளின் ஒலி அமைப்பைக் கொண்டு முதல் எழுத்து, சார்பெழுத்து என இரண்டாகப் பகுக்கலாம். உயிர்எழுத்துகளும், மெய்யெழுத்துகளும் முதல் எழுத்துகளாகும். சார்பெழுத்து எப்போதும் மற்றோர் எழுத்தைச் சார்ந்துதான் வரும். தனித்து வராது. தனித்து வந்தால் பொருள் தராது.

சார்பெழுத்துகள் பத்து வகை 1) உயிர் மெய் 2) ஆய்தம் 3) குற்றியலுகரம் 4) குற்றியலிகரம் 5) உயிரளபெடை 6) ஒற்றளபெடை 7) ஐகாரக் குறுக்கம் 8) ஔகாரக் குறுக்கம் 9) மகரக் குறுக்கம் 10) ஆய்தக் குறுக்கம்

தமிழ்ச் சொற்கள்

எழுத்துகள் இணைந்து சொல் உண்டாகும். சொல்லை நான்கு வகைகளாகத் தொல்காப்பியம் குறிப்பிடும். அவை ***பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்*** என்பன. ஒன்றின் பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல் ஆகும். கந்தன், ஊர், கண் என்பவை பெயர்ச்சொற்கள்.

ஒரு செயல் நடைபெறுவதைக் குறிப்பது வினைச்சொல் ஆகும். செயல் நடைபெறும் காலம் நிகழ்காலம். செயல் முடிந்ததைக் கூறுவது இறந்த காலம். இனிமேல்தான் செயல் நடக்க உள்ளது என்பதைக் கூறுவது எதிர்காலம். வினைச்சொல் செயலைக் குறிக்கும், செயலின் காலத்தையும் குறிக்கும். படி, வா, போ, இரு, வாங்கு, கொடு, கொடுக்கிறான், கொடுத்தான், கொடுப்பான் என்பவை வினைச்சொற்கள்.

பெயர்ச்சொல்லையோ, வினைச்சொல்லையோ அடுத்து வருவது இடைச்சொல்லும், உரிச்சொல்லும் என்று தொல்காப்பியம் கூறும். இடைச்சொல் பெரும்பாலும் இடையில் வரும்; தானாகத் தனித்து வருவதில்லை. பெயரையும் வினையையும் சார்ந்தே வரும். உரிச்சொல் செய்யுளுக்கு உரியது. எல்லா இடங்களிலும் வராது. இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருளுக்கு உரியது உரிச்சொல் என்று தொல்காப்பியம் கூறுகிறது.

தமிழ்ச்சொல் அமைப்பு

ஓர் எழுத்து தனித்து நின்றோ ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் சேர்ந்து நின்றோ பொருள் தந்தால் அது சொல் எனப்படும். தமிழில் 'மொழி', 'கிளவி', 'சொல்', 'பதம்' ஆகியவை சொல்லைக் குறிக்கும் வேறு சொற்கள் ஆகும். சொல்லுக்கு வடிவம் உண்டு. சொல் பொருளைக் குறிப்பது. சொல்லின்

19.2 தமிழ் இலக்கியத்தில் பெண்ணியம்

தமிழ் இலக்கியத்தில் பெண்ணியம் (Feminism in Tamil Literature) என்பது ஒரு பரந்த மற்றும் ஆழமான ஆய்வுத் தலைப்பாகும். இது வரலாற்றுப் போக்கில் பெண்களின் அனுபவங்கள், போராட்டங்கள், குரல்கள் மற்றும் சமத்துவத்திற்கான தேடல்களை வெளிப்படுத்தியும், சமூகப் பாலின அமைப்புகளை சவாலிட்டும் வந்துள்ளது.

இதன் வளர்ச்சியைப் பின்வரும் காலங்களாகப் பிரித்துப் பார்க்கலாம்:

1. **சங்க இலக்கியம் (பொ.ஊ.மு. 300 - பொ.ஊ. 300):**

* பெண் குரல்களும் பார்வைகளும்: அகப்பாடல்கள் பெண்களின் உணர்ச்சி உலகை (காதல், பிரிவுத் துயர், பொறுமை, வீரம்) மையப்படுத்தின. பல பாடல்களைப் பெண்புலவர்களே இயற்றினர் (எ.கா: ஆவி, காக்கைப் பாடினியார்). பெண்களின் விருப்பங்கள், கோபங்கள் வெளிப்படையாகக் கூறப்பட்டன.

* ஆற்றல் மற்றும் மரியாதை: குறுநில மன்னர்களின் தாய்மார்கள் (வேளிர் தாயர் போன்றோர்) அறிவுரை வழங்கும் ஆற்றல்மிக்கவர்களாக சித்தரிக்கப்பட்டனர். துணைவியர் (புறப்பாடல்களில்) தங்கள் கணவனின் வீரத்திற்கு ஊக்கம் தருவதாகக் காட்டப்பட்டனர்.

* பாரம்பரியப் பாத்திரங்களுக்குள்: இருப்பினும், பெரும்பாலான சித்தரிப்புகள் தாய், காதலி, மனைவி, மகள் போன்ற பாரம்பரியப் பாத்திரங்களுக்குள் அடங்கியே இருந்தன. சமூக அமைப்புகள் பெண்களைக் கட்டுப்படுத்தும் தன்மை இருந்தது.

2. **பக்தி இலக்கியம் (பொ.ஊ. 6-9ஆம் நூற்றாண்டு):**

* சமத்துவத்திற்கான ஆன்மீக இடம்: நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களின் இலக்கியம் சாதி, பால் வேறுபாடின்றி அனைவருக்கும் மோட்சம் கிடைக்கும் என்று கூறியது.

* பெண் பக்தர்கள் / கவிஞர்கள்: ஆண்டாள் தனித்துவமான எடுத்துக்காட்டு. அவரது 'திருமொழி' மற்றும் 'நாச்சியார் திருமொழி' ஆகியவை ஆண்டாளின் கடவுள்மீதான காதல் உணர்வுகளை வெளிப்படையாகவும் உரிமையுடனும் வெளிப்படுத்துகின்றன. இது ஒரு வகையில் பாலினத்திற்கு அப்பாற்பட்ட பக்தி நிலையைக் காட்டியது. காரைக்கால் அம்மையார் போன்றோரும் சிறப்பானவர்கள்.

* ஆன்மீக சுதந்திரம், சமூகக் கட்டுப்பாடு: ஆன்மீகத் தளத்தில் பெண்கள் முழுமையான சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் அனுபவித்தாலும், சமூக வாழ்வில் பாரம்பரியப் பாலினப் பாகுபாடுகள் தொடர்ந்தன.

3. **நவீனத்துவத்திற்கு முன் (கி.பி 18-19ஆம் நூற்றாண்டு):**

* நாட்டுப்புற இலக்கியம்: நாட்டுப்புறப் பாடல்கள் (வள்ளல் பாடல்கள், ஊசல் பாடல்கள், ஓடைப் பாடல்கள், நொண்டி நாடகங்கள்) பெண்களின் அன்றாட பிரச்சினைகள், காதல், திருமண வாழ்வின் சிரமங்கள், கணவன் மீதான கோபம், குடும்பப் பொறுப்புகள், சமூகக் கொடுமைகள் (கற்பழிப்பு, வன்முறை) ஆகியவற்றை நேரடியாகவும், சிலசமயம் கிண்டலாகவும் வெளிப்படுத்தின. இது மக்கள் மட்டத்திலான பெண்ணிய உணர்வின் ஆவணமாக அமைகிறது.

* காப்பியங்கள் மற்றும் மரபு நூல்கள்: பெரும்பாலும் பாரம்பரியப் பாலினப் பாத்திரங்களையும், சமூக விதிகளையே (பெண்கள் கற்பு, கணவனுக்கு அடங்கல்) வலியுறுத்தின.

30.3 தமிழ் வளர்ச்சியில் வலைப்பூக்கள்

21ஆம் நூற்றாண்டு அறிவியல் வளர்ச்சியில் அசைக்கமுடியாத இட்தைப் பெற்றிருப்பது இணையமாகும்.தகவல் தொழில் நுட்ப உலகில் இணையம் மிகப்பெரிய உதவிகளை மொழி, இனம், பாராமல் உலக மக்களுக்குச் செய்து வருகின்றது. இது விஞ்ஞானம், அறிவியல்,கணக்குகள் என்ற ஒரு குறிப்பிட்ட சிலவற்றிற்குப் பயன்படாமல் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றி வருகின்றது. நெடிய பாரம்பரிய மிக்க தமிழ்மொழியும் இவ் இணையத்தில் தனக்கென ஓர் இடத்தைப் பெற்று வளர்ந்து வருகின்றது. இணையத்தில் எண்ணிலடங்கா இலக்கிய வகைகளைப்பெற்று வளர்ந்து வரும் தமிழ் மொழிக்கு 'வலைப்பூக்கள்' என்ற புதிய இலக்கிய வகை தோன்றி பெரும் பங்காற்றிவருகிறது.வலைப்பூக்கள் என்றால் என்ன?அதன் தோற்றம், தமிழில் தோன்றிய வரலாறு,மற்றும் அதன் வகைகளாக இலக்கியம் சார்ந்த வலைப்பூக்கள்,பக்தி, ஆன்மீகம், கணிப்பொறி, மருத்துவம், பல்சுவைச் சார்ந்த வலைப்பூக்கள் என பகுக்கப்பட்டு ஒவ்வொன்றின் தமிழ் பயன்பாட்டையும் எடுத்து விளக்க இக்கட்டுரை விளைகிறது.

வலைப்பூ

ஒரு சமுதாயம் இன்றைய பணிகளை இன்றைய கருவி கொண்டு செய்ய வேண்டும்.இன்றைய பணியை நேற்றைய கருவிகொண்டு செய்யும் இனத்தின் நாளைய வாழ்வு நலியும். இது தவிர்க்க முடியாதது" என்று டாக்டர் வா.செ.குழைந்தைசாமி அவர்களின் கூற்றின்படி நாம் இன்றையப் பணியை இன்றைய கருவிக்கொண்டு செய்ய வேண்டும். அதன் அடிப்படையில்தான் நாம் இணையத்தைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டோம். அதில் வலைப்பூக்கள் என்ற ஒரு தனி இலக்கிய வகைத்தோன்றியுள்ளன. ஒருவரிடமிருந்து பிறருக்குத் தெரிவிக்கப் பயன்படுத்தப்படும் தகவல் தொடர்புக்கான எழுத்துக்கள், ஒலி, ஒளி வடிவக் கோப்புகள், ஓவியம், படங்கள் என்று அனைத்தையும் இணையம் வழியே தனிப்பட்ட ஒருவர் உலகில் இருக்கும் பிறருக்குத் தெரிவிக்க உதவும் இணைய வழியிலான ஒரு சேவையே வலைப்பூ என்பதாகும்.

வலைப்பூ என்பதை ஆங்கிலத்தில் பிளாக் (Blog) என்கிறார்கள். இதன் மூலம் வெப்பிளாக் (Webblog) என்பதாகும். 17-12-1997-ல் ஜார்ன் பெர்கர் (John Barger) என்பவர்தான் வலைப்பூவிற்கு ஆங்கிலத்தில் Webblog என்ற பெயரை உருவாக்கிப் பயன்படுத்தினார். இதன் பின்பு இதன் சுருக்க வடிவமான Blog எனும் பெயரை பீட்டர் மெர்ஹால்ஸ் (Peter Merholz) என்பவர் 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் பயன்படுத்தத் தொடங்கினார். இவரது வலைப்பதிவின் பக்கப் பட்டையில் Webblog எனும் சொல் இரண்டாக உடைக்கப்பட்டு We blog என்று பிரித்துக் கையாளத் தொடங்கினார். இப்படியே வலைப்பூவிற்கு Blog எனும் பெயர் நிலைத்து விட்டது.

தமிழ் வலைப்பூ

இந்த blog எனும் ஆங்கிலச் சொல்லிற்கு இணையாகத் தமிழில் ஒரு பெயர் உருவாக்க விரும்பிய போது தமிழ் உலகம் மற்றும் ராயர் காபி கிளப் மடலாடற் குழு (மின் குழுமம்) உறுப்பினர்கள் தங்கள் கலந்துரையாடல்களின் வழியாக blog-க்கு வலைப்பூ என்று தமிழில் பெயர் உருவாக்கினர். இன்று தமிழில் இந்த வலைப்பூ என்ற பெயரே பயன்பாட்டில் இருந்து வருகிறது.

- எனவே, அவர்கள் புத்த, சமண சமயங்களை ஆதரிக்கத்தொடங்கினர். வாணிக வகுப்பினரான இவர்கள் இவ்விரண்டு புதிய சமயங்களுக்கும் மகத்தான ஆதரவு அளிpத்து போற்றினர்
- வர்த்தமான மகாவீரரின் வாழ்க்கை (கி.மு.539 - கி.மு.467)
- வர்த்தமான மகாவீரர் சமண பரம்பரையில் 24வது தீர்த்தங்கரர். வைசாலிக்கருகிலுள்ள குண்டக் கிராமத்தில், ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்த சித்தார்த்தருக்கும், திரிசலைக்கும் வர்த்தமானர் மகனாகப் பிறந்தார்.
- யசோதை என்ற பெண்மணியை மணந்த அவர் ஒரு பெண் மகளுக்கும் தந்தையானார். தளது முப்பாதாவது வயதில் துறவு பூண்ட வர்த்தமானர் பன்னிரண்டு ஆண்டுகள் சுற்றியலைந்தார்.
- 13 ஆம் ஆண்டில் தவத்தின் பலனாக 'கேவல ஞானம்' என்ற உயரிய ஆன்மீக அறிவைப் பெற்றார். அதன்பின் அவர் மகாவீரர் என்றும், ஜீனர் என்றும் அழைக்கப்பட்டார். அவரது சீடர்கள் சமணர்கள் எனப்பட்டனர். அவரது கருத்துக்கள் சமணம் என்று வழங்கப்;பட்டது.
- முப்பது ஆண்டுகள் தொடர்ந்து தமது கருத்துக்களை மகாவீரர் பரப்பிவந்தார். தமது 72 ஆவது வயதில் ராஜகிருகத்திற்கு அருகிலுள்ள பாவா என்ற இடத்தில் அவர் மறைந்தார்.

மகாவீரரின் போதனைகள்:

- சமண சமயத்தின் மூன்று முக்கிய கோட்பாடுகள் மூன்று இரத்தினங்கள் எனப்படுகின்றன. அவை:

1. நல்ல நம்பிக்கை
2. நல்ல அறிவு
3. நல்ல நடத்தை

- நல்ல நம்பிக்கை என்பது மகாவீரரின் கருத்துக்களிலும் பேரறிவிலும் நம்பிக்கை வைத்தலாகும். நல்ல அறிவு என்பது கடவுள் இல்லை என்ற கோட்பாட்டை ஏற்றுக்கொண்டு, உலகத்தை படைத்தவர் எவருமில்iலை என்பதையும் அனைத்து பொருட்களுக்கும் ஆன்மா உண்டு என்பதையும் உணர்ந்து கொள்வதாகும். நல்ல நடத்தை என்பது ஐந்து முக்கிய விரதங்களை கடைப்பிடிப்பதைக் குறிக்கும். அவை:

1. உயிர்களுக்கு தீங்கு விளைவிக்காமை
2. பொய் உரைக்காமை
3. களவு செய்யாமை
4. சொத்துக்களை கொள்வதை விடுத்தல்
5. ஒழுக்கமற்ற வாழ்வை நடத்தாமலிருத்தல்

- சமண சமய சீடர்களும், மக்களும் அகிம்சைக் கோட்பாட்டை தவறாமல் கடைப்பிடித்தல் வேண்டும்.